# உண்மையும் பொய்யும் – 2002 குஜராத் கலவரங்கள்

**அருண் ஜேட்லி**

**(மாநிலங்களவையின் எதிர்கட்சித் தலைவர்)**

2014 ஜனவரி 4–ஆம் தேதி ‘மோடிநாமா’ என்ற பெயரில் கல்வியாளரும், சமூக ஆர்வலருமான மது பூர்ணிமா கிஷ்வர் மராத்தி மொழியில் எழுதிய புத்தக வெளியீட்டு விழாவிற்கு என்னை அழைத்திருந்தார்கள். மது பா.ஜ.க. ஆதரவாளராக இருந்ததில்லை. கடந்த காலத்தில் இவர் கட்சியை பல முறை விமர்சித்துள்ளார் என்று எனக்கு நினைவிருக்கிறது. இந்தப் புத்தகத்தின் ஹிந்தி மற்றும் ஆங்கில பதிப்புகளும் விரைவில் வெளியிடப்பட உள்ளன. புனேயில் உள்ள வினீத் குபேர் இதன் மராத்தி மொழி பதிப்பை வெளியிட்டுள்ளார். பல மாதங்கள் ஆசிரியர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. 2002ல் நடைபெற்ற கலவரங்கள் தொடர்பாவ இவர் பலரை பேட்டி கண்டு பதிவு செய்து, உண்மை நிலவரங்கள் பற்றி இவருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இதை எழுதியுள்ளார். இதன் வெளியீட்டு விழவில் நான் பேசும்போது, 2002 கலவரங்களில் நரேந்திர மோடியை சம்பந்தப்படுத்துவதற்கு தொடர்ச்சியான பிரச்சாரங்கள் (அல்லது சதிச் செயல்கள்) மேற்கொள்ளப்பட்டு வந்தன என்பதையும் மேலும், அவை எல்லாமே உண்மைக்குப் புறம்பானவை என்பதால் தாமாகவே தோற்றுப் போயின என்பதையும் விளக்கிக் கூறினேன்.

என்னுடைய உரையில் நான் குறிப்பிட்ட மூன்று முக்கிய உண்மைகளை இங்கு கூறுகிறேன்.
முதலாவது – சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலில் தீ வைத்தது யார்

கோத்ரா ரயில்வே ஸ்டேஷனில் இருந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த தவறாக வழிநடத்தப்பட்ட ஒரு கும்பல்தான் எஸ்–6 பெட்டிக்கு தீ வைத்தது என்பது அந்த சதிச்செயல் நடந்த அன்றே தெளிவாகத் தெரிந்துவிட்டது. இந்த வழக்கை முதலில் குஜராத் போலீஸ்தான் விசாரணை நடத்தியது, அதைத் தொடர்ந்து உச்ச நீதி மன்றம் இந்த வழக்கை சிறப்பு புலனாய்வு குழுவிற்கு (எஸ்.ஐ.டி.) மாற்றியது. சிறப்பு புலனாய்வு குழுவின் விசாரணையில் இந்த நிகழ்வு நடப்பதற்கு முதல் நாள் கோத்ராவில் ஒரு கூட்டம் நடைபெற்றது தெரிய வந்தது. அதன் அடிப்படையில் இந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. ரயில் நிலையத்துக்கு வாகனங்களில் எரிபொருள் கொண்டு வரப்பட்டன. எஸ்.6 பெட்டியின் கதவு யாரும் தப்பித்து வெளியே வர முடியாதபடி வெளியிலிருந்து இழுத்து மூடப்பட்டது. ஆயுதம் ஏந்திய கும்பல் வெளியே இருந்து அந்த பெட்டிக்குத் தீ வைத்தது.
யாரும் வெளியிலிருந்து அந்தப் பெட்டிக்குத் தீ வைக்கவில்லை என்றும் உள்ளிருந்துதான் தீ விபத்து ஏற்பட்டது என்றும் ஒரு சில ஊடகங்களும் சில என்.ஜி.ஓ.க்களும் கூறி அதை நம்ப

வைக்க மோசடி முயற்சிகளை மேற்கொண்டன. இந்த வழக்கு முடிவில் சதி திட்டம், கலவரம், மற்றும் படுகொலைகளுக்காக மிகப் பெரிய எண்ணிக்கையிலான நபர்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் மேல் முறையீடுகள் நிலுவையில் உள்ளன. மிக அதிக எண்ணிக்கையில் சாட்சியங்களைக் கொண்டு குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருந்தாலும், முதலில் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ரயில்வே அமைச்சராக இருந்த லாலு பிரசாத் யாதவ் மூலமாக பணி ஓய்வு பெற்ற நீதிபதி ஜஸ்டிஸ் யு.சி. பானர்ஜியின் தலையில் ரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு குழுவை நியமித்தது. மோசடியான இந்தக் குழு விசாரணை அறிக்கையில் அந்தப் பெட்டியில் தவறுதலாக உள்ளிருந்தே தீ பிடித்திருக்கக்கூடும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் அறிக்கை அதன் நம்பகத்தன்மையை இழந்து, குப்பைத் தொட்டிக்குப் போய்விட்டது. இந்த அறிக்கையின் ஒவ்வொரு விஷயமும் தவறு என்பதை நீதி மன்ற விசாரணை நிரூபித்தது.

ஹிந்து சமூகத்தினரே இந்தப் பெட்டிக்குத் தீவைத்து அதன் மூலம் வேறு ஒரு சமூகத்தினருக்கு எதிராக ஹிந்துக்களைத் தூண்டிவிடக் காரணமாக இருந்தது என்று அபாண்டமான பொய்ப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாவது, செயல்–எதிர்ச்செயல் என்கிற மோடியின் பேட்டி – இப்படி ஒரு பேட்டியை அவர் கொடுக்கவேயில்லை.

நரேந்திர மோடி குஜராத்தில் நடைபெற்று வந்த கலவரங்களை நியாயப்படுத்துகிறார் என்பதை நிலை நிறுத்துவதற்காக ஒரு முன்னணி பத்திரிகை, 2002 மார்ச் மாத முதல் வாரத்தில் தானாகவே 'நரேந்திர மோடி பேட்டி' என்று ஒன்றை கற்பனையாக வெளியிட்டது. மோடி அளித்ததாக கூறப்பட்ட அந்தப் பேட்டியில், நரேந்திர மோடி ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை உண்டு எனவே, கோத்ராவில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கு எதிர்விளைவாக இந்தக் கலவரங்கள் நடைபெறுகின்றன என்று இவற்றை நியாயப்படுத்தியதாக கூறியிருந்தது. இப்படி ஒரு பேட்டியைத் தான் கொடுக்கவில்லை என்று நரேந்திர மோடி கூறி வருகிறார். இந்தப் பத்திரிகையைச் சேர்ந்த எந்த நிருபரும் இவரைப் பேட்டிக்காக அணுகவேயில்லை. அப்படி இருக்கும்போது கேள்வி–பதில் பாணியில் ஒரு பேட்டி, வன்முறை கலவரங்களை மோடி நியாயப்படுத்தியதாக வெளியாகி இருப்பது ஆச்சரியம்தான். குஜராத் அரசு இந்தப் பத்திரிகைக்கு இப்படி ஒரு பேட்டியை நரேந்திர மோடி அளிக்கவில்லை என்றும் பேட்டி எடுப்பதற்காக யாரும் முதலமைச்சரை சந்திக்கவே இல்லை என்று கூறி ஒரு கடிதம் எழுதி மறுப்பு தெரிவித்திருந்தது. இந்தக் கடிதம் அடுத்த 20 நாட்கள் வரையிலும் வெளியிடப்படவேயில்லை. அதன் பின்னர், நரேந்திர மோடியை பேட்டி எடுப்பதற்காக யாரும் சந்திக்கவில்லை என்றும் முதலமைச்சர் ஒரு

குறிப்பிட்ட சேனலில் அளித்த பேட்டியின் அடிப்படையில் இந்த பேட்டி 'உருவாக்கப்பட்டது' என்ற விளக்கத்துடன் ஆசிரியருக்கு கடிதம் பகுதியில் இந்தக் கடிதம் வெளியிடப்பட்டது.

<u>மூன்றாவதாக, 27/2/2002 அன்று முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம்</u>

நரேந்திர மோடிக்கு எதிராக சாட்டப்பட்ட மூன்றாவது பொய்க் குற்றச்சாட்டு இது. முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமைச் செயலாளர், டி.ஜி.பி., முதன்மை செயலர் (உள்துறை), மற்றும் பிற மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதில் மாநில அரசின் மற்றும் காவல் துறையைச் சேர்ந்த எட்டு மூத்த அதிகாரிகள் இருந்தனர். ஆனால், இந்தக் கூட்டத்தில் எஸ்.பி. அந்தஸ்தில் உள்ள அதிகாரியான சஞ்சீவ் பட் போன்ற அதிகாரிகள் கலந்துகொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அந்தக் கூட்டத்தில், அதிகாரிகளிடம் நரேந்திர மோடி, ஹிந்து சமூகத்தினருக்குத் தங்கள் கோபத்தை தீர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று கூறியதாக 2006ல் முதல் முறையாக புகாரளித்த ஜக்கியா ஜாஃப்ரே குற்றம் சாட்டினார். இப்படி எதையும் தான் கூறவில்லை என்றும் இந்தக் குற்றச்சாட்டிற்கு நேர்மாறாக, வன்முறைகள் எதுவும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய கடுமையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டது என்றும் அமைதி காக்கவும் பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிடுமாறும் மக்களிடம் வேண்டிக்கொள்ளும் பல அறிக்கைகளையும் வெளியிட்டதாக கூறி இதற்கு முதலமைச்சர் மறுப்புத் தெரிவித்தார். அந்தக் கூட்டம் நடைபெற்ற எட்டு வருடங்கள் கழித்து இப்படிப்பட்ட தூண்டிவிடுவதைப் போன்ற அறிக்கைகள் அந்தக் கூட்டத்தில் வெளியிடப்பட்டன என்று அதில் கலந்துகொண்டதாக கூறிய சஞ்சீவ் பட் தெரிவித்தார். அதில் கலந்துகொண்ட எட்டு அதிகாரிகளையும் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை செய்தது. அவர்கள் அனைவரும் இப்படி எதுவும் கூறப்படவில்லை என்றும் சஞ்சீவ் பட் அதில் கலந்துகொள்ளவில்லை என்று கூறினர். சஞ்சீவ் பட் அஹமதாபாத்தில் இருப்பதற்கான ஏராளமான சாட்சியங்கள் கண்டறியப்பட்ட நிலையில் அவர் காந்தி நகரில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதாக சாட்சியங்கள் ஜோடிக்கும் முயற்சிகள் எப்படி மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான சாட்சியங்களை சிறப்பு புலனாய்வுத் துறை கண்டறிந்தது. தொலைபேசி உரையாடல் பதிவுகள் உட்பட ஒருவரின் போக்குவரத்து சம்பந்தமான அனைத்து சாட்சிகளையும் கண்டறிந்தது. மாநில அரசை சீர்குலைக்கும் நோக்குடன் குற்றச்சாட்டு மற்றும் சதிதிட்டத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் வரைவு புகார் மனு தயாரிப்பதில் என்.ஜி.ஓ.க்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாநில காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களிடம்கூட ஆலோசனை நடத்தப்பட்டதற்கான ஆதாரம் கிடைத்தது. சஞ்சீவ் பட் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் இப்படிப்பட்ட அறிக்கையை முதலமைச்சர் வெளியிடவில்லை என்றும் சிறப்பு புலனாய்வுக் குழு அறிக்கையை முடித்திருந்தது. அப்போது முதலமைச்சரின் அறிக்கைகள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு

நேரெதிராக இருந்தன என்றும் கூறியது. சிறப்பு புலனாய்வுத் துறையின் கருத்துக்கு மாதிஸ்திரேட் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

மேற்கூறப்பட்ட மூன்று நடவடிக்கைகளும் சுமார் பத்தாண்டு காலமாக ஒலித்து வந்த ஊடக விவாதத்தை ஒடுக்கியது. இந்தப் பொய்க் குற்றச்சாட்டைத் தொடர்ந்து கூறி வந்தவர்கள் அல்லது இந்தப் பொய்ப் பிரச்சாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களைத் தாமே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நான் எப்போதுமே பொய்கள் சிதறிப்போகும் தன்மை உடையவை, ஆனால் உண்மைகள் ஒன்றிணைந்துகொள்ளும். மேலே சொன்ன விஷயங்களை எடைபோட இதைவிட பொருத்தமான உதாரணம் இருக்க முடியாது.